முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.04.2024**, செவ்வாய்கிழமை

1. அருட்பெருஞ் சக்தி வடிவான
அண்ணலே ஞான குருவே
அருட்தயவாய் மக்களை காக்க
அவதாரம் எடுத்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென குரோதி தகர் திங்கள்
வல்லமைதரும் மூவையீர் திகதி குசன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 17 ம் நாள், 30.04.2024, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் இடங்கழி நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமுடன் மாயைத் துன்பமெல்லாம்
சைவநெறியால் செகம்விட்டு அகலும்
4. அகலும் மாச்சர்யம் எல்லாம்
ஆபத்து கயமை எல்லாமே
மகான் அரங்கன் உபதேசத்தால்
மாதருமத்தால் அகன்று மேவும்
5. மேவியே தானென்று செருக்கும்
முன்னேறவிடா தனிமனித சூழ்ச்சி
அவனியில் நற்குணங்கள் பெருக
அனைத்தும் அகன்று மேவி
6. மேவியே மற்றவரை மதிக்கும்
மேம்படுத்துகின்ற வண்ணம்
அவனியில் நற்பண்புகளாக
அரங்கன் ஆசியால் பெருகி
7. பெருகியே தயவு தருமம்
பேருலகில் வளர்ந்து நிற்கும்
முருகப் பெருமான் வழிபாடாகி
முழுமை ஞானம் அடையும் படி

8. அடையும்படி அனைவருக்குமே
அரங்கன் ஆசியால் வாய்ப்பு
தடையற கிட்டி மாற்றங்கள்
தவராஜன் ஞானப்படைகளாக

9. ஆகவே மக்கள்படை பெருகி
ஆன்மீக ஞானத் தலைமை
மகான் அரங்கன் ஆசிபட
மண்ணுலகம் கண்டடையும்

10. அடையவே எல்லாம் கிடைக்க
அனைவரும் சமம் என்ற
சோடைவெல்லும் வழிமுறையாக
செகமெல்லாம் நிரம்பியே

11. நிரம்பியே ஞான ஆட்சி நீதி ஆட்சி
நிலவுலகம் கண்டுத் தேறும்
அருந்தவராஜனால் அகிலம் மாறும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—